416

உ

வேலுமயிலுந் துணை.

சேலம் திருச்செங்கோடு தாலூக்கா

காளிப்பட்டி

### கந்தசுவாமிக் கடவுள்

# பதிகக் கோவை.



OFFICE OF THE REGISTRAR
14 JUL 1928
MADRAS
2467

இஃது

சென்னை

## T. R. கோவிந்தராஜ முதலியார்,

(Son of
Late ... Ratna Mudaliar, Govt., Abkary Distillery Supdt.)

...ர்களால் இயற்றப்பெற்று

...கடேச அச்சியந்திரசாலையில்

...சிப்பிக்கப்பட்டது.

1928.

Q26:38·216K4
N28.
170670.

## தனி.

அருவமு முருவு மாகி
    அநாதியாய் நிற்கு மீசன்!
திருவுரு வெய்தி யீங்கே
    ஜெனித்தவ னீயென் றெண்ணி
மருவிய மனத்தாற் கொண்டேன்
    வள்ளலே! யறிவா யுண்மை
கருவிழி வள்ளி பங்கா!
    கருணையைக் காட்டு வாயே.

வேலுமயிலுந் துணை.

சேலம் திருச்செங்கோடு தாலூக்கா

காளிப்பட்டி

## கந்தசுவாமிக் கடவுள்

# பதிகக் கோவை.



இஃது

சென்னை

**T. R. கோவிந்தராஜ முதலியார்,**

(Son of

Late T. Ratna Mudaliar, Govt., Abkary Distillery Supdt.)

அவர்களால் இயற்றப்பெற்று

சேலம் ஸ்ரீவெங்கடேச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[Copy Right.] 1928 [Registered.

416
2689
584814
OFFICE OF THE REGISTRAR
14 JUL 1928
MADRAS

170620

சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்கா
வெள்ளாளப்பட்டி பண்டித பரம்பரை வித்வான் பிரம்மஸ்ரீ
S. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் இயற்றிய

# அரங்கேற்றுப்பா.

---

அறுசீர் விருத்தம்.

வாளியற் கண்ணாள் வெள்ளை மலாமக ளருளு ஞானத்
தாளிய லறிஞன் சென்னைக் கோவிந்த ராஜன் றானே
வெளிப லருளாற் செய்த விததக வருட்பா மாலை
காளியம் பதிவே லன்முன் கவியரங் கேற்றி னானே (1)

பொருட்பல பொதிந்த கேள்விப் பொன்மலர் வீசு மாபோல்
தெருட்கலை வாண னென்ன தினந்தினந் தெய்வப பாடல்
மருட்பல வேகு மாறு வரைந்தினி தருளு மாற்றால்
அருட்கவி யென்ற பேரிவ் வணபருக் கேற்குந் தானே. (2)

வெண்பா.

சீராரும் வைபவத்திற் சித்திரையில் மேலோர்கா ணஇன்
கூர்மதிநாட் கோவிந்த ராஜகவி — யார்புனைந்த
வாளிகுல கம்புமருட் பாமாலை பெற்றதே
காளியம பதியான் கழல்.

சுபம்! சுபம்!! சுபம்!!!



826'38:2116 KP
N28

## காளிப்பட்டி

# ஸ்தல மான்மியச் சுருக்கம்.

அறநெறி வழுவாத அன்பர் பலர்க்கும் அருள்சுரந் தளிக்கும் அப்பன் அறுமுகச்சிவனார் மேவிய பதிகள் பலவற்றுள் இப்பதியும் ஒன்றாகும். இச்சிறு நகரில் கந்தவேள் எழுந்தருளிய திருக்கோயில் காண்பவர் கண்களைக் கவரத்தக்க மாட்சியும், மூர்த்தியின் வனப்பும், வேண்டுவார் வேண்டியாங்கீயும் பெருங்கருணைத் திறமும் நோக்குவார்க்கு உண்மை தோன்றும்.

இங்கு குமரக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளிய வரலாறு:—இந்நகரில் வசித்துவந்த லட்சுமணக் கவுண்டர் என்ற பெரியார் பிரதி ஆண்டுகள்தோறும் பழநியம் பதியானுக்குக் காவடி செலுத்துந் தொண்டுபுரிந்து வந்தனர்.

இவ்வாறு நிகழுங்கால் பெரியார் கனவிற்றோன்றி, "இவ்வாண்டு முதல் உமதில்லத்தையே கோயிலாகக்கொண்டு எனபால் செலுத்துங் காவடியை வைத்துப் பூசிப்பாய். நான் அங்கு வருகின்றேனெனக் கட்டளையிட்டு மறைந்தனர்." அவ்வாண்டு முதல் குருநாதன் திருவுளப்படி தமதில்லத்தையே கோயிலாகக் கருதிக் காவடியை வைத்துப் பூசிக்கலாயினர்.

அன்பருளமே கோயிலாகக் கொண்டுறையும் அவனிபுகழ் கலியுகவரதன் திருக்கருணையாலும் பெரியார் அருள் வாக்கினாலும் செல்வம் நிகழ, தமதில்லத்தையே கோயிலாகக் கட்டி முடித்தன ரென்பர். இக்கோயிலுக்குக் கீழ்ப்புறம் மணிமுத்தா நதியும், டுதன் புறம் சோளீஸ்வர சுவாமி சந்நிதியும், மேற்புறம் பொன்னிமா நதி யும், வடபுறம் சித்தர்மலை என்ற கஞ்சமலையும் அமையப்பெற் றுள்ளன.

கோயிலின் மூலஸ்தானத்தில் கந்தசாமி என்ற பெயர்பூண் ந்த தண்டபாணி திருவுருவமும், முன்மண்டபத்தின் வலது பக்கத்தில் வள்ளிதெய்வயானை சமேதராய் விளங்குஞ் சுப்ரமணி யக் கடவுள் உற்சவ மூர்த்தியும், விநாயக மூர்த்தியும் எழுந்தருளி இருக்கின்றனர். பெரியார் காவடி வைத்துப் பூசித்த இடத்தில் சிவலிங்கத்தை ஸ்தாபித்து, காவடியும் அருகில் வைத்து இன்றும் பூசித்து வருகின்றனர். இச்சந்நிதி இடும்பர் கோயிலெனப் பெயர் வாய்ந்துள்ளது.

திருமுருகன் திருக்கோயில் கட்டி முடிந்ததும், திருவாசல் முன் வரட்டுப் பசுவைக் கொண்டுவந்து திருவருள் வலததால் பெரி யார் கரத்தினால் பால் கறந்து அபிஷேகஞ் செய்துள்ளார்.

இக்கோயில் வெளிமண்டபத்தின் மேல் உத்தரமாகிய கருங் கல்லில் தேரை இருப்பதாகவும், அக்கருங்கல் சம்பத்தில் வெடி ப்பு உண்டாகுமென்றும் மத்தியில் ஒரு கம்பத்தை நாட்டும்படிக் கும் கந்தவேள் கட்டளையின்படி கம்பம் நாட்டியிருப்பதை நேரிற் காணலாம். இவைபோன்ற பல அற்புதக் காட்சிகள் இன்றும் நிகழப்பெற்று விளங்குகின்றன. இக்கோயில் கட்டிமுடித்த பெரி யார் ஒளவருடம் சித்தி அடைந்தனர். இற்றைக்கு எழுபத்தோர்

ஆண்டுகளாகின்றன. ஆண்டவன் கட்டளையின்படி திருக்கோயி லின் எதிரில் அப்பெரியார் சமாதி அமைத்திருக்கின்றனர். இப் பெரியாரின் சந்ததியில் வந்த இவரது பௌத்திரர் பூ. லட்சுமணக் கவுண்டரால் கோயில் பூசிக்கப்பெற்று வருகின்றது. இவ்வரிய ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமையும் ஆயிரக் கணக்கான ஜனங் கள் வந்து தரிசிப்பதும், அன்றையதினம் கந்தசாமிக்கு ஏராள மாகப் பாலபிஷேகம் நடப்பதும், பிரதி ஆண்டுகள்தோறும் தைப் பூச மகோற்சவத்தன்று எண்ணிறந்த சோதனைக் காவடிகள் வரு வதையும் கண்கூடாகக் காணலாம்.

இவ்வியப்புஸ்தகத்தின் பெருமையை நோக்கி, சென்ற ஏழு ஆண்டுகளாக செந்திற்செல்வன் எழுந்தருளும் ஆலயந்தோறும் பாடும் பணியே பணியாய்க்கொண்ட சிறுவன் உளளங்கனிந்து இப்பதியையும் பாட அவாவுற்று இச்சிறுநூலைத் திருவருள் சகாயத் தால் செய்து முடித்தனன். காண்டற்கரிய கந்தவேள்பால் அன்பு பூண்ட அடியார் பலரும் இச்சிறு நூலையும் கைக்கொள்வார்க ளென்று எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை இறைஞ்சுகின்றேன். இந்நூல் அச்சியற்ற ஷெ கோயில் பூ. லட்சுமணக் கவுண்டர் மிக்க அன்போடு பொருளுதவி செய்தனர்.

குற்றமிருப்பின் உலகம் பொறுக்க.

சுபம்! சுபம்!! சுபம்!!!

சேலம், 1—3—28.

இங்ஙனம்,

தி. ர. கோவிந்தராஜன்.

# சாத்துக்கவி.

இந்நூலியற்றியவரது ஞானாசிரியரும், சிவகுருநாதன் திருவடியை
ஆன்மார்த்தமாகப் பூசிப்பவரும், பெருந் துறவியுமாகிய
தில்லைவளாகம் சிவகுருநாத நிலைய மடாலயம்
சிவஸ்ரீ ஆனந்த சண்முக சரணாலய சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளியது.

## எழுசீர் விருத்தம்.

ஓம்பொரு ளிறைக்கே யுணர்த்திய முருக
　　னுயர்திரு வடியனம் பதித்து
மேம்பரி வோடு சாற்றினன் றமிழால்
　　வியன்பெரும் பதிகமக் கந்தன்
ஆம்பரி வதனை லமர்தலம் பலவு
　　மணியணைத் தண்ணிய வன்பால்
நாம்பகர் குணக்கோ விந்தரா ஜப்பேர்
　　நாவலன் நன்குற மாதோ. (1)

திப்பிய குணக்கோ விந்தரா ஜன்சொல்
　　திகழ்தமிழ்ப் பதிகநற் குவையை
அப்பெரு முருக னகமகிழ் வோடே
　　யணிந்தருள் புரிந்திடல் சரதம்
ஒப்பறு பதிக முவையெலாங் கூட்டி
　　யோங்கிடப் பதிக மஞ்சரியென்
செப்பொரு பெயராற் சிறப்புற வுலகிற்
　　செழித்திட வாழியீர் தனனே. (2)

# அடிமைத்திறம்.

அரனடி யாரை யரனென வெண்ணி
விரகுட னவர்பணி விளக்குவார்க் கடியேன்
முழுமுதற் கடவுள் சிவனென மொழியும்
முழுது முணர்ந்த முனிவர்கட் கடியேன்
சிவலிங்க மதனைச் சிவனென வுன்னி
அவனது ஆலய பணை யவர்க் கடியேன்
திருமறை யிதுவெனத் தெளிந்தோர் சொல்லும்
திருமுறை மொழியைச் செப்புவார்க் கடியேன்
பெந்த மகற்றும் பெரிய புராணஞ்
சொந்தமாய்ப் பயிலுந் தூயோர்க் கடியேன்
மந்திரத் தலைமை மாட்சிமை யாகும்
ஐந்தெழுத் தோது மன்பருக் கடியேன்
பதிபசு பாசம் பண்புட னுணர்ந்து
விதிமுறை தவறு விபுதர்கட் கடியேன்
பைந்தமிழ் மலராற் பரிவுடன் றொடுக்குஞ்
செந்தமிழ் நாவலர் சீரடிக் கடியேன்
அறுபான் மும்மை யமல ரடியிணை
மறவா தேத்து மகிபருக் கடியேன்
அக்கமா மணியை யன்புடன் தரித்துத்
தக்கதோர் பூதி சாத்துவார்க் கடியேன்
பனிமலர்க் குழலாள் பாகனார் தம்மைக்
கனவிலு மறவாக் கனிவினார்க் கடியேன்
அறுமுகக் கடவுளை யனுதின மறவாப்
பெருமகிழ் பெரியர் பிறங்கடிக் கடியேன்
குணநிறை சென்னைக் கோவிந்த ராஜற்
கணிகல னவதின் கடிமைத் திறமே.

இங்ஙனம்,

தி. ர. கோவிந்தராஜன்.

## கடவுள் வணக்கம்.

### பதினன்குசீர் விருத்தம்.

வந்திக்கு மடியர் தம் வாழ்நிலையு மாகிவழி
யளிக்கால் கதியு மாகி
மறைபாகி பொருளாகி மலர்மகன் சிறையாக
செய்திட்ட செல்வ மாகி
சிந்திக்குஞ் சிந்தையாய்ச் செப்பரிய துணைபாகி
சிவராஜ வடிவ மாகி
தித்திக்கும் ரஸமாகி தெவிட்டிடா அமுதமாய்
தெய்வானை கணவ னாகி
மந்திரமும் ஆருகி முப்முறை ஒலித்திடும்
மறைப்பதமும் தாஞ கியே
மணியாகி மருந்தாகி மருந்தூறு மமிர்தமாய்
மதியூடு முருவி நின்று
சந்ததந் தொழுமடியர் நெஞ்சகத் தேபெரிய
சத்தோடு சித்து மாகி
சமரசத் தன்மையாய் நின்றுவளர் ஜோதியே
சண்முகத் தெய்வ மணியே.

## சேலம் ராஜ கணபதி துதி.

### கலி விருத்தம்.

சீருலாவிய சேலமாநகர் தேரடியமர் செல்வனும்
சீருலாவிய ராஜகணபதி நிமலனுமவன் விமலனும்
காருலாவிய கஜமுகன்பதங் கண்டுநாளும் பணிகுமே
பாருலாவிய சண்முகன்புகழ் பரிந்துபாட விரும்புமே.

உ

## காளிப்பட்டி கந்தசாமிக் கடவுள்

# பதிகக் கோவை.

---

### விநாயகர் வணக்கம்.

அறுசீர் விருத்தம்.

சீரெலாம் படைத்துள் ஓங்குந்
திருவுபர் காளிப் பட்டி
ஊரெனும் பதியில் நின்ற
ஒருதனிக் கந்தன் ருட்குப்
பாரெலாம் பரவ விந்தப்
பசுந்தமிழ் மாலை சொற்றேன்
காருலாங் கரிமு கத்தோன்
கடையனுக் கருள்செய் வானே.

---

### ஸ்ரீநடராஜர் துதி.

---

விருப்பானை யகவிருளை யொழிப்பானைச்
செழிப்பாக விளங்கு மன்று
ளிருப்பானைக் கயிலையெனும் பொருப்பானை
எமதுளத்துக் கினிமை யானை
மருப்பானை முகத்தானை யளித்தானைக்
கனிவுடையோர் மனதைத் தீங்கிற்
றிருப்பானை யின்பரசக் கருப்பானை!
யிறைவனெனத் தேர்ந்து வாழ்வாம்.

---

☞ இப்பதி சேலததிற்குத தென் பாரிசத்தில் பதின்மூன்று மைல் சமீபத்திலுள்ளது. அரியானூர் ஸ்டேஷனில் இறங்கினால் 6-மைல் தூரத்திலுள்ளது.

## சிவகாமி அம்மை துதி.

---

அண்டமெலா மணுவாக வகத்தடக்கிச்
சராசரமா யமைந்த அம்மைப்
புண்டரிக மலர்த்தாளைப் புந்தியுறப்
பணிவோர்க்குப் பொருளை நல்கிக்
கண்டனைய சிவஞானங் கலந்தூட்டி
யருள்வழியிற் காக்கு மெங்கள்
தண்டொலிப புகழ்மன்றுள் சிவகாம
வல்லிபதஞ் சாற்றி வாழ்வாம்.

---

## சிவகுருநாதன் துதி.

---

பொருளினைத் தெரிய வுன்பதி யடைந்து
புலம்பிய ஒருமொழி யேற்று
மருளினை நீக்கி அருளினைப் பெருக்கி
வான்பொரு ளுணர்த்தியென் றென்றும்
பெருநிழல் தந்த பெருந்தனிப் பதத்தைப்
பேணின னெளியனென் மனத்தே
திருமிகு தெய்வத் தில்லைவளாகச்
சிவகுரு நாதசற் குருவே!

---

## சிவசுப்பிரமணியர் துதி.

---

திங்களணி சிவபெருமான் முகத்திலறு
முகனுதித் திகழ்ந்து நித்துப்

பொங்கமுட னொருமுகத்த னேயாகி
யடியவர்க்காப் பொலிந்து நின்று
பங்கமிலா தியானருக்குங் கருணைதரத்
திருக்காளிப் பதியில் நின்ற
மங்கலிலா தொளிர்மணியை யென்னுடைய
கண்மணியை வாழ்த்து வேனால்.

## குரு வணக்கம்.

அவதானி யென்றிந்த அவனிபுகழ்
அருஞ்சொல்லை ஆய்ந்து கேட்டுப்
புவிமீது வந்தேற்குச் செந்தமிழின்
கனிரசத்தைப் புகட்டிப் புங்கத்
தவமதனாற் சித்தாந்த சாரமதைப்
போதித்த சாந்தன் பூவைக்
கவிராஜன் கலியாண சுந்தரனைத்
துதித்தேத்திக் கருத்துள் வைப்பாம்.

## சற்குரு வணக்கம்.

இருள்நிறைந்த மனத்தெனையு மிருளகற்றி
யொளிவிரித்தே இன்ப மாக்கிப்
பொருள்செறிந்த ஒருமொழியைப் புந்தியினிற்
பொருந்திடவே புகன்று தந்து
வரும்பெரிய வினையையெலாம் நீக்குதற்கு
வான்பொருளை வணங்கக் காட்டி
அருள்பெருக ணைநதசா னலயனு
ரடிப்பதும மகத்துள் வைப்பாம்.

## தந்தையார் துதி.

நட்ட மாடிய நம்ப னடியிணை
பெட்ட மாமனப் பெரிய விரத்தினம்
சுட்டி லாத்தனி யெந்தையார் தூவடி
யிட்ட மாக யிறைஞ்சுவாய் நெஞ்சமே.

## அவையடக்கம்.

செப்பிய வினைகள் பையச் செடியெனப்
படர்ந்து முற்றுங்
கப்பிய துயரைப் போக்கக் கருத்தினிற்
கொண்டு நாயேன்
சுப்பிர மணியன் செய்ய சுடராடி
சிரமேற் கொண்டு
முப்பணி செய்ய லுற்றேன் முருகனே
யறிவ னன்றே.

## நூற்பயன்.

பாதிம திநதி பண்புடன் சூடிய
ஆதியா மண்ண லன்புட னீன்றதோர்
கோதிலா வள்ளி கொஞ்சுயர் முருகனைப்
பேதையே னுள்ளம் பேணித்து திப்பனே.

# நூல்.

## எழுசீர் விருத்தம்.

ஓம்பதப் பொருளாய் ஒளிசுடர் வெளியாய்
உருவமு மருவமு மாகித்
தாம்பழுத் துறவோர் தனிச்சுடர் மனத்திற்
றருபதம் காட்டிடுமிக் கருணை
யாம்பழுத் துறவாய் வினைபெறா மறுத்தே
அருளுறு வாக்குமெய்ப் பெருக்கே!
காப்பகர் காளிப் பட்டியி லமர்ந்து
நலந்தருங் கந்தநா யகனே. (1)

சரியையோர் நான்கிற் சாதனை யிலாது
சஞ்சலப் படுகுழி யாழ்ந்து
பெரியதோர் ஞானத் துறையினை யணுகப்
பெருமதி பெற்றிலேன் முருகா!
உரியநோ ரிச்சை யணுத்துணை யளவும்
உளமதிற் றரித்திடிற் பூசை
புரிகுவேன் காளிப் பட்டிவாழ் சிவமே!
புனிதனே! கந்தநா யகனே. (2)

வாடிய பயிர்போல் வகையறி யாமல்
வயிற்றினை வளர்த்துமே தினமும்
நீடிய பிணியால் மெய்யெலாந் தளர்ந்து
நெக்குநெக் குருகிடா மனமும்
மூடியே யுலக வாழ்வினி லழுந்தி
யுண்மையொன் றறிந்திடாப் பேதை
நாடினேன் காளிப் பட்டியி லெழுந்த
நாதனே! கந்தநா யகனே. (3)

ஆளொனு படியர் தங்குழாத் துடனே
அன்புறுமென் சிந்தை யெல்லாம்
காளழிந் தகல வொடுமிப் பருவ
நாயினேன மனததகக் குரங்கு
தேனெனக் கொட்ட திகைப்புறு வலர்ந்தேன்
சிந்தையின் செபமெனு மனைத்துங்
கேளையா காளிப் பட்டியில் வாழும்
கிருபையார்! கந்தநா யகனே. (4)

ஓங்கிய வுன்றன் றிருவடி நினைந்து
ஒருவழி நிலைபடாச் சிறியேன்
தேங்கிய புலன்க ளைந்தினுக் கிலக்காய்த்
திகைப்புறு மென்மன கனிப்ப்
பாங்குறு மன்பர்க் கிசைக்ககற் பணியைப்
பழுதிலா தியற்றவுன் கருணை
ஈங்கருள் காளிப் பட்டிவாழ் ஈசா!
இன்பமே! கந்தநா யகனே. (5)

கன்றினைப் பிரிந்த பசுவெனக் கதறிக்
கதறியே புலப்புமிப் பேதை
மன்றுறு மனத்தே நிறைந்தவெந் துயரால்
மனமெலா முருகிவந் தடைந்தேன்
இன்றுவா நாளை வாவெனச் சொல்லி
லேழையான் செயவதொன் றறியேன்
நின்றருள் காளிப் பட்டியி லெழுந்த
விமலனே! கந்தநா யகனே. (6)

எடுத்தவிவ் வுடலாற் பெரும்பய னுவ
திருவெனப் பேதைபெற் றருளி
அடுத்துநின் னடியார் குழுவினிற் கலந்த
வறிவெலாம் பெற்றிட வெனக்குக்
கொடுத்தருள் புரிவாய் குவித்திரு கரங்கள்
கூப்பினேன் குணமிலே னெனக்கை
விடுத்திடேற் காளிப் பட்டிவாழ் அமலா!
விமலனே! கந்தநா யகனே. (7)

இன்பினைப் பெருக்கும் ராஜயோகத்தி
லேகாந்த நிட்டையுற் றதிலே
அன்பினைப் பொழியுஞ் சிவமுதுண்ட
அடியரின் கூட்டநன் னடுவில்
என்புறு பேதை எய்துதற் கிசைவாய்
எழில்மிகும் மோனமாம் வடிவே!
நன்பொழில் காளிப் பட்டியி லெழுந்த
நாதனே! கந்தநா யகனே. (8)

மறையெலாங் கூடி ஓலமிட் டலறி
சாற்றுவன் பெருமா விளக்கே!
குறையெலாங் கடிந்த பெரியவ ருளத்தே
குவிந்துநின் றாடுமெய் கந்தா!
சிறையெலா மொழித்துன் றிருவருள் சுரந்துச்
சிறுவனுக் கருளுநா ளுளதோ!
துறையுலாங் காளிப் பட்டிவா ழரசே!
துரியமே! கந்தநா யகனே. (9)

லெக்கா வின்பப் பரவெளி நடுவில்
ஓய்வுட னயர்ந்தவென் னெஞ்சம்
நீங்கிடா நிலையி லிருந்திடவே சுகமாய்
நிறைதரன் னெறியெலாம் அருள
பாங்குறு பதங்கள் பரவினே னெனக்குப்
பயமொரு சிறிதுமே யில்லை
தீங்கறுங் காளிப் பட்டியில் வாழும்
தெய்வமே! கந்தநா யகனே. (10)

---

## தனி.

உடையவன் வேண்டுங் காலை உணர்வுட
னளிக்கும் பாண்டஞ்
சடலமா மீதென் றெண்ணிச் சஞ்சலந்
தவிர நாளுங்
கடைநம னணுகா வண்ணங் காளியம்
பதிவாழ் கந்தன்
அடியிணைச் சிரமேற் றாங்கி அன்புறப்
பணிவோம் வாரீர்.

---

## வெண்பா.

என்றோ வருள்புரிவா யென்றெண்ணி யேங்குமெற்கு
நன்றே புரிதற்கோர் நாளிலையோ?—இன்றாகில்
எவ்வாறிங் குய்வேனோ? எளியேன் முருகா! நீ
தவ்வா வுனதருளைத் தா.

# வேல் பத்து.

ஓங்கார ரூபமய மொளிர்ந்த வேலே!
உம்பர்சிறை தீர்த்திட்ட வொருவன் வேலே!
தீதான சூருயிர் தீர்த்த வேலே!
செருக்களத்தல் நவவீரர் தேடும் வேலே!
பாங்கான மயிலேறிப் பறக்கும் வேலே!
பரந்தாமன் மருகனைப் பணிந்த வேலே!
காங்கேயன் தெய்வானை வள்ளி காந்தன்!
காளிநகர்க் கந்தவேட் கரத்து வேலே. (1)

ஆதிநடு வந்தமிலா வமிர்த வேலே!
ஆருயிருக் கோருயிரா யமைந்த வேலே!
பனிமதி தலைக்கணியும் பரமன் வேலே!
பரிந்துமையாள் தான்கொடுத்த பவித்ர வேலே!
நீதிபுனை முனிவரர்கள் நெஞ்ச வேலே!
நிலையான வழிகாட்டு நிமல வேலே!
காதலுட னருள்புரியுங் கனக மேனிக்
காளிநகர்க் கந்தவேட் கரத்து வேலே. (2)

சந்ததமு மடியவர்வைப் பான வேலே!
சமரசமா மெவ்வுயிருந் தரிசிக்கும் வேலே!
விந்தையெலாஞ் செய்தருளை விளக்கும் வேலே!
விளங்குதிருப் பரங்குன்றில் விருப்ப வேலே!
பந்தமெலா மறுத்தருளைப் பதிக்கும் வேலே!
பண்புடையார் மனக்குகையிற் பதுங்கும் வேலே!
கந்தமுறு மனைத்தன்பர்க் கினிய மெய்ப்பயன்!
காளிநகர்க் கந்தவேட் கரத்து வேலே, (3)

சித்திக்குங் களிம்பமாய்த் திகழும் வேலோ!
சிவஞானங் குழைக்கருளுந் தெய்வ வேலோ!
பத்திகளே யிலங்கியருள பதிக்கும் வேலோ!
பவக்கடலை பொருநொடியிற் பருகும் வேலோ!
முத்திக்கு வழிகாட்டும் முதன்மை வேலோ!
மோனமெனுங் கடலுலவு முதிர்ந்த வேலோ!
கத்துதடஞ் சோலைமணை காத நாளும்
காளிநகர்க் கந்தவேட் காத்து வேலே. (4)

சீர்பெருகப் பழனிநகர் திகழும் வேலோ!
செழுஞ்சுடரா யுலகெங்குந் திரிந்த வேலோ!
பேர்பெருகப் பலநாமம் பெற்ற வேலோ!
பெரும்பிணிக்கு மருந்தருவாய்ப் பிறங்கும் வேலோ!
வார்பெருக வரை மீது வளரும் வேலோ!
வரையுமையா ளுவந்தளித்த வயிர வேலோ!
கார்பொழிய நின்றருளும் கருணை வள்ளல்!
காளிநகர்க் கந்தவேட் காத்து வேலே. (5)

மணிவயிர மிழைத்த மாணிக்க வேலோ!
மகிமைமிகு ஞானதேசன் மலர்ந்த வேலோ!
அணிபினழுபாள் சக்திபுனை யளித்த வேலோ!
அருள்ஞானப் பழக்குநேர் வபர்ந்த வேலோ!
பணிவுடையா ரிடரகற்றிப் பரிக்கும் வேலோ!
பசுபாசந் தொலைத்தருளும் பரம வேலோ!
கணிதருமா மயிலுறுத்துக் காக்குஞ் சோதி!
காளிநகர்க் கந்தவேட் காத்து வேலே. (6)

வாடாத நித்திலங்கள் வைத்த வேலோ!
வளமுறு மாணிக்கநிரை பருவு வேலோ!
நேடாத வைரமெலாம் நிறைந்த வேலோ!
நின்றமிழ்வாணி நவமணிகள் நிலைத்த வேலோ!
தேடாத பொருள்களெலாஞ் செறிந்த வேலோ!
தெளிவான அன்பருட் டித்திக்கும் வேலோ!
காடான மனத்துமொளி காட்டும் மெய்ம்பால!
காளிநகர்க் கந்தவேட் கரத்து வேலே. (7)

வள்ளிமணம் புரிவித்த வஜ்ர வேலோ!
வனவேங்கை மரமாக வளர்ந்த வேலே!
துள்ளியெழு பசு ஊனமுன் றொலைத்த வேலோ!
சுரப்பிடியின் கணவனருள் சுரக்கும் வேலோ!
தெள்ளுதமி ழெனக்குழைத்த செம்மை வேலோ!
தேடரிய ஜோதியெனச் சிறந்த வேலே!
கள்ளமிலா வடியரகங் கலந்த மெய்யன!
காளிநகர்க் கந்தவேட் கரத்து வேலே. (8)

சரவணப்பேர்த் தடத்திலெழுஞ் சாமி வேலோ!
சத்தொடுசித் தாகிவளர் சமர வேலோ!
குரவகுழு மகிழவெழுங் குமர வேலோ!
சோதிவளருஞ் சுடர்வடிவாய்க் குவிந்த வேலே!
சிரவணஞ்செய் கற்றவரிப் பேசால் வேலே!
செந்திநக ருலவுமொரு தீர வேலே!
கருவனை புகாதருளுமவ ககன வேணிக்
காளிநகர்க் கந்தவேட் கரத்து வேலே. (9)

பொய்கடிக்க சிந்தையுள்ளே பொலியும் வேலோ!
பொறுப்புடையா ருளத்தின்பம் பொழிந்த வேலோ!
மைகயங்க நெஞ்சகத்தே பணக்கும் வேலோ!
மருளுடையார் மனத்தமைய மதியா வேலோ!
ஐயமெலாந் தீர்த்திட்ட அன்பு வேலோ!
அருந்தவத்தோர் போற்றுகின்ற அழகு வேலோ!
கைபகன்ற வடியருளங் கனிந்த நாதன!
காளிகைக் கந்தவேட் கரத்து வேலே. (10)

---

## தனி.

---

வஞ்சமே குடிகொண்ட வையமிசை யாரொருவன்
வழக்கிடற் கேதா மின்றி
தஞ்சமென் றுன்பதந் துணையெனக் கொண்டனன்
சாமிநீ முற்று மறிவாய்
அஞ்சுத லிலாதநின தருட்சைவ போகத்தை
யடியனுக் கனுக்ர கித்து
மிஞ்சியே போதிக்க மெய்யருளை வேண்டினேன்
மிகுமனங் கனிகு வாயே.

---

## வெண்பா.

---

வாக்கு மனந்தொடரா வான்பொருளே! வையகத்தில்
நீக்கமற வெங்கும் நிறைமுருக!—போக்கறவே
யென்மனத்தி லீங்குற்றே இன்னருளைத் தந்திடுவாய்
நன்மைமிகப் பெற்றுய்ய நான்.

---

# மயில் பத்து.

போரா வினையின் மூலவே ரறுத்துப்
பிறப்பினை யொழித் திருவனச
ஆரா வமுதின் வாரிதி யழுந்தி
ஆனந்தத் தேன்றுய்த்து வாழ
காரா யணற்கு மருகனா யமைந்த
நாதனைக் காளிமா நகர்வாழ்
வாரா வரவான் வரநட மிடுவாய்
மணிச்சிறைக் கலாபமா மயிலே. (1)

தீராக் கவலைக் கடலிடை யழுந்தித்
தெளிவிலாச் சிறியனேற் கிரங்கிப்
போரா ரவுணர் உரம்பொடித் தென்றும்
புகழ்பவி காளியம் புரிவாழ்
ஏரார் கலாப நடநவில் மயிலே!
எந்தையார் திருமுனே நின்று
போரா தினிக்குந் திருவருள் சுரக்கப்
பெருந்தகைக் குணர்த்துவாய் சிகியே. (2)

அளவிலாத் துயரா விடருற வருந்து
மடியனை வாவென வழைத்து
களவிலா மொழிபைக் கருணையோ டெனக்குக்
கனிந்தருள புரிந்திலை முருகன்!
உளவெலா மறிந்து பையவே செவியி
லுணர்த்துதற் கேகிடீ யின்று
வளமெலாஞ் சூழுங் காளியம் புரிவாழ்
வரதன்பா லுறைகுவாய் மயிலே. (3)

தோர துளத்தே தெளிவுறக் கருணை
சுரந்தளித் தூட்டிய செல்வன்
வாரா திருக்கு மாயமொன் றறியேன்
வலியவந் தாண்டவெம் பெம்மான்
சீரார் குறத்தி குஞ்சரி தன்னோ
டயர்ந்தநற் சிறப்பினால் மறந்தான்
நேரா யினிக்குங் காளியம் பதியான்
நேர்வரச் செப்புவாய் மயிலே. (4)

காளிமா நகர்வாழ் கந்தனுக் குகந்த
கலாபமா பஞ்ஞைஞுபே யடியேன்
நாளிது காறும் நறுமணக் கடப்ப
நாண்மலர்த் தாரனார் வனசத்
தாளிணை யூறு மாகந்தத் தேனின்
மதுசுவை யறிந்திலேன் இதயக்
கோளது தவிரக் கருணைநா யகற்குக்
கூறுவாய் அருளுடை மயிலே. (5)

அருளுடை மயிலே ஆணவ விருளை
யகற்றுமெய்ஞ் ஞானபாற் காரனார்
இருளுடை யுலகில் எனைத்தனி வருந்த
யேவினார் கருணையோர் மிக்கார்
மருளுடை யுளமோ வென்வழி வாரா
மாலெனைக் குதிப்பதென் செய்வேன்
தெருளுறுங் காளிப் பதியெழு மவற்குச்
செப்புவாய் வேண்டினேன் சிகியே. (6)

செப்புவா யின்பந் திளைத்தருள் முருகன்!
சேவடி பாவிடும வாழ்க்கை
இப்புவி மாந்தர்க் கில்லைபோ வுளதோ?
ஏழையே னிருசெவி குளிரச்
சுப்பிர மணியச் சுவாமிதா னெனக்குத்
துணைபுரிவா னெனுஞ் சுபச்சொல்
ஒப்புற வுரைப்பாய் காளிபம் பதியான்
உகந்தெழு கலாபமா மயிலே. (7)

வாழிநீ மயிலே வருந்திய வென்று
வாழ்க்கையைப் புதிதமாய் மாற்றும்
ஊழியல் நினைதே ஒருபெருங் கருணை
யுடையவன் றிருமுனே சென்று
நாழிகை தன்னில் அடியனேன் குறைகள்
நவின்றவன் கருணையின் வயத்தை
ஏழையேன் பெறவே காளிநன் னகராற்
கெடுத்துரை கலாபமா மயிலே. (8)

சுபநலம் பெரிதுஞ் சுகமெனக் கருதுஞ்
சோரர்தங் குழுவினிற் கலக்க
பயமது மிக்க வுடையவ னதனுன்
பாசிவ னடியவர் பணியே
நயமுறத் தரித்த தெனதுளம் சிகியே
நலம்பெற வாழிநீ யருளி
துயாறுங் காளிப் பதியெழுந் துரைக்குச்
சொல்லிவா வெனவழை மயிலே. (9)

திகிரிறை தன்னைச் சேவடி வணங்கி
திருவளர் காளிபம் பதியின்
பதிபதி வேலன் மலரடி பணிந்து
மாட்சிபெற றப்பனை போற்றிக்
குறைபடா வுஞ் சிறுவனிவ் வுலகில்
கூறிய பாடல்கள் முற்றும்
அகங்கனிந் தேற்க அறுமுகற் குரைப்பாய்
அழகுசேர் கலாபமா மயிலே. (10)

---

## தனி.

---

கனிந்திடா திருப்பையேல் கடையனுக் கார்துணை
கருணைக் குரித் தாகுமோ
நினைந்திடும் அன்பர்க்கு நின்னிழ லலாதுபிறி
தொருநிழலும் வேறு முளதோ
மனந்தனைச் சுத்தமா யாக்குமுன் னடியார்கள்
மனத்தினிற் சுவை கரும்பே!
தினந்தினந் தொழுதுமுன் னருளினைப் பெறுமவே
சிறுவனும வாட லழகோ.

---

## வெண்பா.

---

பண்டைத் தமிழ்க்குகந்த பாவலர்க ளுள்ளுறுந்
தண்டமிழ்க்குத் தானுகக்குஞ் சண்முகனே—கண்டுநீகர்
மென்மதுர வாக்கினால் மெய்யாகு முப்பொருளை
இன்புறவெற் கூட்டியருளிங்கு.

# சேவல் பத்து.

பந்தமெலா மறவொழித்துப் பரகதிக்கு
வழிகாட்டும் பறவை யேநீ
சிந்தையெலாம நிலைநிறுத்துஞ் சுகவழியைச்
சுரந்தூட்ட சென்று மூல
விந்தையெலாஞ் செய்தருளுஞ் சிவனளித்த
செல்வனவன் விரைந்து மேவுங்
கந்தமுலாங் காளிநகர்க் கந்தவேள்!
வரவொருக்காற் களித்துக் கூவாய் (1)

வையகத்திற் றுயிலுகின்ற மனிதர்கடம்
வாணாள்வீ ணாயிற் றென்று
பையவிரு சிறைபடித்துக கூவுமொரு
குக்குடமே பயந்து வாழ்த்து
செய்யமரர் சிறைமீட்ட சேவகனார்
செந்தில்நகர்ச் செல்வ ராடற்
கையமருங் காளிநகர்க் கந்தவே
ளிங்குவரக் களிந்து கூவாய். (2)

தினமுமுனக் கடிமையெனச் சொல்லுகின்ற
இறுவன்மொழி செபபக் கேண்மோ!
வினையில்வினை மயக்கமற அருள்வழியை
விளக்குகின்ற விமலன் றன்பால்
தனையனொரு மனக்கவலை யுறுமடியன்
றரணியினிற் றழைந்து வாழக்
கனகமணி வாரணமே காளிநகர்க்
கந்தன்!வரக் களித்து கூவாய். (3)

மறைநிதமுந் துதிக்கின்ற சிவசுப்ர
மண்யனவன் வலத்தில் நின்று
நிறைபெருகும் பழவடியர் முழுபாசந்
தொலைத்தருளை நிலைக்க நாட்டி
குறைபகற்றிக் கூவகாட்டுவ குக்குடமே
கோமானைக் குறுகி வாழ்வாய்க்
கறையொழிக்குங் காளிநகர்க் கந்தவேள்!
வரவொருக்காற் கனிந்து கூவாய். (4)

பொறிச்சூட்டு வாரணமே பொழுதுணர்த்து
மொருதிருவேவாய்ப் போற்றுகின்றேன்
இறிச்சூட்டு முலகநிலை பொய்யென்றே
தினந்தினமுங் இரங்கு நீதான்
வெறிச்சூட்டு மயலழுந்து மாக்கடமைக்
கடிந்திடுவாய் விடியல் நேருங்
குறிச்சூட்டு மாதவனைக் காளிநகர்க்
குருபரனைக் கூவுவாயே. (5)

பைஞ்சிறைய வாரணமே பகலுணர்த்தும்
திருவுடையாய்ப் படைப்பின் மாந்தர்
நைஞ்சிறைபை மறந்தபெரும் பயமதனைச்
சிறகடித்து நவிலு வாய்நீ
பெய்ஞ்சிரங்கு மாமுகில்போ லடியார்க்குக்
கருணைமழை பெய்யும் வள்ளல்!
உய்ஞ்சிடவே நின்னடிபேண் காளிநகர்
உத்தமனைக் குணர்த்து வாயே. (6)

கூவாய்கொல் குக்குடமே காளிநகர்க்
குருபரனை!க் குமரன்! றன்னை
ஆவாநீ யவன்கொடியி லமர்ந்திருந்தும்
அடியவர்க ளழைப்பைக் கேட்டுந்
தேவாதி தேவனைப்போற் பராமுகமா
யிருப்பதும்நின் செயலோ சொல்லாய்
சாவாத பிறவாத தனிவாழ்வை
யாணடையத் தயைசெய் வாயே. (7)

எப்பொருட்கு முயர்ந்த பிரான்
திருமுடிமேற் கொடியாகி யிருக்கின்றாயை
ஒப்புயர்வு மில்லாத பரம்பொருளாய்
வாழ்த்துவேன் உவகை மீறி
யிப்புவியின் வாழ்வுகண மென்றுநிதங்
கூவுவா யெனது வேட்கை
வெப்பொழியக் காளிநகர்க் குருபரனா
ரிங்குவர விரைந்து கூவாய், (8)

கோழியுறு வொடுமயிலான் கொடியதனி
லுறைகின்ற கோவே நீதான்
வாழியவ னருகிருக்கும் வரம்பெற்றாய்
யானதனல் வந்திப் பேனல்
பாழியநின் திருவுளத்துப் பாங்கருணை
யருளாலே பரிந்து தேடும்
ஏழையிவன் றரிசிக்கக் காளிநகர்
இறைவனைநீ யிரைந்து கூவே. (9)

அகவிருளைக் கடிந்தால மறுத்துலை
முறுக்கிகவி யருளிற் பாடத்
தகைமையுட னெனக்கருளி பமைறுக்கும்
வழிபகலைச் சாற்றிப் போங்கான்
மிகப்பாவிப் பலகாலும் விளைந்தழைக்கும்
வரக்காலேனன் வேண்டுகின்றேன்
குகபெருமான் கொடிக்கலமே காளிநகர்க்
கந்தன்வரக் கூவு வாயே. (10)

---

## தனி.

---

முருகனே என்று ளொருதர முரைக்க
முத்தமிழ்ச் சுவையெலா மேவும்
முருகனே என்று ளிருமுறை யுரைக்க
முற்பவம் நின்றிடா தொழியும்
முருகனே என்று மொழிவிலா துரைக்க
மூண்டபற் பலபிணி யகலும்
முருகனே நின்னைக் கனவிலுந் துதிக்கும்
முறையருள் வந்துமுன் னின்றே.

---

## வெண்பா.

---

கண்டேன் திருப்பாதங் காண்பெரிய கோயிலின்கண்
விண்ணேறு நந்தேரா வியன்பணியே—என்முருகா!
பைந்தமிழ்ப் பூக்கொய்து பாக்சுப் பிறத் தாரொடுத்து
விந்தையுறச் சாத்திடுவேன் வேண்டு.

---

# திருநீற்றுப்பதிகம்.

அன்பை மிகுப்பது நீறே! ஆவ லொழிப்பது நீறே!
இன்பைத் தருவது நீறே! ஏழைக் கருள்வது நீறே!
துன்பைத் துடைப்பது நீறே! தூய்மையைச் செய்வது நீறே!
நன்மைசேர் காளியம் பதிவாழ்-எங்கள் நாத ரணிகின்ற நீறே! (1)

அல்ல லறுப்பது நீறே! ஆர்வ மிகுப்பது நீறே!
கொல்லை யொழிப்பது நீறே! சீலத்தைத் தருவது நீறே!
நல்லோ ரணிவது நீறே! நன்மை தருவது நீறே!
வல்லவர் சூழ்காளிப் பதிவாழ்-எங்கள் வள்ள லணிகின்ற நீறே (2)

கற்றோ ரணிவது நீறே! கவலை யறுப்பது நீறே!
உற்றோ ரணிவது நீறே! உண்மை யுரைப்பது நீறே!
பற்றற நிற்பது நீறே! பாவந் தொலைப்பது நீறே!
பொற்றடங் காளியம் பதிவாழ்-எங்கள் புனித ரணிகின்ற நீறே (3)

பொன்னிறஞ் செய்வது நீறே! போகந் தருவது நீறே!
கன்னலஞ் செய்வது நீறே! ஞானத்தோ ருய்வது நீறே!
சென்னி யணிவது நீறே! சீர்த்தி தருவது நீறே!
சன்னல் வயல்புவி காளிப்-பதி கந்த ரணிகின்ற நீறே! (4)

மறையுள் மொழிவது நீறே! மனத்துய ரறுப்பது நீறே!
குறையைக் களைவது நீறே! சுற்ற மறுப்பது நீறே!
சிறுமை யொழிப்பது நீறே! சிறப்பைத் தருவது நீறே!
முறையுயர் காளியம் பதிவாழ்-எங்கள் முதல்வ ரணிகின்ற நீறே (5)

சிந்தையி லுள்ளது நீறு! செம்மை தருவது நீறு!
பந்த மறுப்பது நீறு! பாங்கைத் தருவது நீறு!
சந்தந் தருவது நீறு! தாபந் தணிப்பது நீறு!
விந்தைசூழ் காளியம் பதிவாழ்-எங்கள் வேல ரணிகின்ற நீறே! (6)

நாவுக் கிசைந்தது நீறு! நாவலர் பேலது நீறு!
பாவுக் கிசைந்தது நீறு! பான்மை தருவது நீறு!
பூவுக் கிசைந்தது நீறு! பொற்பைத் தருவது நீறு!
தேவுயர் காளியம் பதிவாழ்-எங்கள் தேவ ரணிகின்ற நீறே! (7)

வருத்தந் தணிப்பது நீறு! வளமை யளிப்பது நீறு!
பொருத்தம தாவது நீறு! பூங்கழல் சேர்ப்பது நீறு!
விருத்த ரணிவது நீறு! வினையை யறுப்பது நீறு!
திருத்தகு காளியம் பதிவாழ்-எங்கள் செல்வ ரணிகின்ற நீறே! (8)

அருளைத் தருவது நீறு! ஆசை யொழிப்பது நீறு!
பொருளைத் தருவது நீறு! பொன்னிறஞ் செய்வது நீறு!
மருளை யறுப்பது நீறு! மாநில முய்வது நீறு!
இருளறுங் காளியம் பதிவாழ்-எங்கள் எழிலா ரணிகின்ற நீறே! (9)

விண்ணோ ரணிவது நீறு! வினைக ளறுப்பது நீறு!
மண்ணோ ரணிவது நீறு! மதியைத் தருவது நீறு!
எண்ணுமோ ரெண்ணங்கள் யாவும் எளிதின் முடிப்பது நீறு!
தண்பலர் சூழ்காளிப் பதியில்-கந்த சாமி யணிகின்ற நீறே! (10)

# கிளிப்பத்து.

அல்லலை யிருக்குந் துறையினி லழுந்தி
அறுமுகன் மலரடி மறந்தே
செல்லென நிகர்த்த வாழ்வையே பெரிதாய்ச்
சிந்தையிற் றரித்ததென் செய்வேன்
எல்லையி லின்பக் கருணைவா ரிதியாய்
ஏழையைக் கைவிடா யின்றே
ஒல்லைவா வென்று செப்புவாய் கந்தற்
குகந்தசெங் கைபமர் கிளியே. (1)

ஊற்றெழுங் கேணி உடற்பிறப் பெடுத்தும்
உறுபய னறிந்திலா யாக்கைச்
சோற்றினைப் பஞ்சுப் பொதியென வடைத்து
சுகமிலாச் சுகத்தையே விரும்பி
ஆற்றினைச் சூடு மையனு ரளித்த
அறுமுகச் செல்வனை மறந்தேன்
மாற்றுதற் கினிய நன்மருந் தளிக்க
மகிழ்ந்திக் குணர்த்துவாய் கிளியே. (2)

பாங்கெழுந் துள்ளம் பாரிடை மயக்கின்
பலனென வைம்புலப் பாதை
யாந்தையைச் சுகமாய் ஆடியும் குதித்தும்
அலமருண் டாழ்குழி வீழ்வேன்
சுரந்தெழு கருணை வாரியன் சிவனார்
தோன்றலா மறுமுகத் துரையை
விரைந்தழைத் தேனென் றிவ்வொரு சொல்லை
விளம்புவாய் வாழிநீ கிளியே. (3)

இறைஞ்சுவேன் நின்னை பென்றுநான் மறவேன்
ஈசனார் புதல்வனார் கருணை
மறைஞ்சிட்டா திலங்க மலர்விழி தந்து
மலரடி முடிதனிற் பதித்துக்,
குறைஞ்சிய வன்மைப் பெருக்கியே முருகன்
குளிர்தரு திருவருட் கடலில்
நிறைஞ்சிட வாழ்ந்து நின்மல சுகத்தை
சேர்ந்திடச் செய்குவாய் கிளியே. (4)

சேர்ந்திடு மடியர் குறைகளைத் தவிர்ந்து
நிமலவாழ் வருள்தயா நிதியன்
தேர்ந்திடு கருணைச் செம்மல்தன் னடியர்
திறத்தினிற் சோதியாச் செல்வன்
பேர்ந்திட மாயைப் பிணியரி தமனன்
பிறப்பிறப் பொழித்திடும் பிரானைச்
சார்ந்தியான் பூசை புரிந்தருள் பெறவே
சாற்றுவாய சுகந்தருவ கிளியே. (5)

கற்புவி யிடத்தே நரனுட லெடுத்தும்
நற்சுகம யாதுநான பெற்றேன்
பொற்புறு மடவார் மயக்கினிற் சிக்கிப்
பொழுதெல்லாங் கழித்தனன் வீணில்
அற்புறு முளத்தே அறுமுகன பதத்தை
அனுதினம பாவிநா னறியேன்
சொற்பெறும் முருகன துணிந்தருள புரியான்
சொல்லிவா பைஞ்சிறைக் கிளியே. (6)

தேடியே முருகன் திருவடி பணிந்து
திருவருட் பெற்றநல் லன்பர்
வாடிடாப பணியில பணத்தகணீந் திக்து
மகிழ்வுறச் செய்தநா ளறிபேன
மூடியே படரும பனத்திருள் நீக்க
முன்னருள் புரிவனை யிலனை
பாடிடும புலவாக் கருளபுரி பவனைப்
பரிந்துவா வெனவழை கிளியே. (7)

கல்லைநேர் பனத்த னாயினு முனது
கருணைசெ ரடியினைத துதித்தே
சொல்லிய குறையுந் துடுக்கனு மரவி
தொடாபையு மகற்றியாண டருள
வல்லவ னனை சூரனைத் தடிந்து
வானர சளித்தசண் முகத்தை
நலலருள் புரிய நயவுரை யாடி
வாவென நவிலுவாய்க் கிளியே. (8)

செய்யநற் கமலத் திருவடி விளக்கிச்
செபபுமோர் மாலைக ளனைத்தும்
ஐபநின் பதததி லன்புறச் சூட்டி
அருள்பெறும் அடியா லொருவன்
துய்யவுன பதமே துணையெனக் கொண்டு
தூத்தமிழ் மாலையாய் புனைநதான்
பையவுன் செவியில வற்றருள் புரிவாய்
என்றிதைப பகருவாய் கிளியே. (9)

170670
170670.
026:58:21
K128

எழுதியும் படித்தும் பாடியும் பரவி
இனித்திடும் நாமமே முருகன்
அழுதகண் ணார அருள்சுரந் தளிப்பன்
ஆறிரு நயனமே யுடையான்
தொழுதகை யேறத் துதிப்பவர் தமக்குத்
துணைபுரிந் தருளுவன் றருபோல்
பழுதிலாக் கிளியே அவன்றரு ளெனக்குப்
பதித்திட தயவுசெய் யினியே. (10)

---

## வருகைப்பா.

---

கருத்தேவருக! கருத்தினுறுங் கனியேவருக!
கனிவினுக்கோர்
திருத்தேவருக! திருத்துவிக்குந் திறலேவருக!
திறலளிக்கும்
உருத்தேவருக! வுரிமையெல்லா முடையாய்வருக!
வுடற்பிணிபோம்
மருத்தேவருக! காளிநகர் கந்தாவருக!
வருகவே!

---

மூவிரு சமயம் போற்ற முகங்களோ ராறுங் கொண்டு
தாவியிவ் வுலகமுய்யத் தனிப்பெரும் வடிவந் தாங்கி
மேவிய வரையின் மீது மெய்ப்பதி பொலியச் செய்து
தீவினை பறிக்குங் காளிப் பதியெழுந் தேவே போற்றி.

# தெய்வ வணக்கம்.

கருத்தறியாக் காலத்தே கலந்துகொண்ட தெய்வம்!
கள்ளமனந் திருத்தியொளி காட்டுவித்த தெய்வம்!
உருத்தெரியாப் பருவத்தே யுளங்கவர்ந்த தெய்வம்!
உள்ளபடி யெனக்கறிவை யுணர்த்துவித்த தெய்வம்!
பொருத்தமுட னெனக்கிசைந்த பொற்பமைந்த தெய்வம்!
போதகனாய்ச் செந்தமிழின் புலமளித்த தெய்வம்!
திருத்தமுறக் கவிபாடும் திறமளித்த தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமதே தெய்வம்! (1)

அல்லலுறுஞ் சமயத்தே யருள்சுரக்குந் தெய்வம்!
அடியர்படுந் துயரனைத்தும் ஆற்றுவிக்குந் தெய்வம்!
இல்லையெனா தென்பாட்டிற் கிசையளிக்குந் தெய்வம்!
இருநிலமும் புகழுமதி யீந்தருளுந் தெய்வம்!
கல்லைநிகர் மனத்தினையுங் கனிந்துருக்குந் தெய்வம்!
கண்களிக்க மயிலேறிக் களியாடுந் தெய்வம்!
செல்லைநிகர் சிறுவாழ்வின் செயலுணர்த்துந் தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமதே தெய்வம்! (2)

மறைகளெலாங் கூடியென்றும் வாழ்த்துகின்ற தெய்வம்!
மணிவயிர வேல்தாங்கு மார்பகத்துத் தெய்வம்!
குறைகளெலாங் கணப்பொழுதில் குறைத்தருளுந் தெய்வம்!
சூரவர்மனங் களிக்கவரும் கோலமிகுந் தெய்வம்!
நிறைகளெலாம் நன்மனத்தே நீட்டுகின்ற தெய்வம்!
நிர்மலமா மென்மனத்தே நிலைத்திருக்குந் தெய்வம்!
சிறைகளெலாந் தவிர்த்தருளுந் திருவருளார் தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமதே தெய்வம் (3)

பத்திவலைப் படுகின்ற பரமனெனுந் தெய்வம்!
பவக்கடலை மாற்றாயர்வழி பார்க்கவருள் தெய்வம்!
அத்திமுகத் தார்கிளைய அறுமுகர்க்குத் தெய்வம்!
ஐம்முகக்கோ டதோமுகமு மாகிநின்ற தெய்வம்!
நத்தினவர்க் கின்பநிலை நாட்டுவிக்குந் தெய்வம்!
நலமுறவே மனக்குகையுள் நடமாடுந் தெய்வம்!
சித்திபெற மன்பர்பெறுந் திறமளிக்குந் தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமிதே தெய்வம். (4)

அப்பனெற்றிக் கண்ணிலெழுந் தங்கமுள்ள தெய்வம்!
அப்பரொடும் அடியரிடர் ஆற்றுவிக்குந் தெய்வம்!
இப்புவியில் மக்களெலா மின்புகொளுந் தெய்வம்!
இம்மையுடன் மறுமைசுக மீந்தருளுந் தெய்வம்!
எப்புவியும் புகழ்பெறவே இணங்குமொரு தெய்வம்!
ஏழையிடர் தீர்க்கவெழுந் தெழிலணைந்த தெய்வம்!
செப்பரிய முழுஞானத் தேசிகனாந் தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமிதே தெய்வம்! (5)

சொற்கடங்க திசைமுகனைச் சிறையிட்ட தெய்வம்!
செழிப்புறவே சிருட்டித்தொழில் பூண்டபெருந் தெய்வம்!
உருக்கமுடன் சிவன்வினவச் சிறப்புவிரிக்க தெய்வம்!
ஓம்பொருளை முழுமுதலார்க் குணர்த்துவிக்க தெய்வம்!
தருக்கமிட நாவலர்காக் கனிவெழுந்த தெய்வம்!
தனித்தமிழைக் குழைத்தூட்டுங் கனிமைவளர் தெய்வம்!
திருக்குறளுக் குச்சிறுஞான சித்திதருந் தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமிதே தெய்வம்! (6)

9B
74

இச்சையெழக் கானகத்திற் கெழுந்தருளி வேடர்!
இன்புறவே வள்ளிமணம் ஏற்றபெருந் தெய்வம்!
அச்சமிகு சூர்தொலைத்தங் கமரரிடர் தீர்த்தே
அன்னைதெய்வ யானைமணம் அதற்கிசைந்த தெய்வம்!
நச்சுபெருங் கிரிபகற்றி ஞானமெனும் வேலை!
நாபகியா ரிடம்பெற்ற தாயகமாந் தெய்வம்!
சிச்சைவழிப் பெரியோர்கள் செப்புகின்ற தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமதே தெய்வம்! (7)

காணுகின்ற பதிகளெல்லாங் காட்சிதருந் தெய்வம்!
கலியுகத்து வரதனெனுங் கண்கண்ட தெய்வம்!
ஆணும்பெண் ணுமுலக மடிபணியுந் தெய்வம்!
ஆர்வமிக மனத்தோங்கி யன்போங்குந் தெய்வம்!
பூணுகின்ற மெய்யடியார் புந்தியமர் தெய்வம்!
புனிதமெனக் குன்றுதொறும் பொலிந்தாடுந் தெய்வம்!
சேணுமுயர் பாதளமுஞ் சென்றுவருந் தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமதே தெய்வம்! (8)

அருணகிரி நாதருக்கன் றருள்புரிந்த தெய்வம்!
அனுதினமு மவர்பாடற் கன்புசெயுந் தெய்வம்!
வருணனைப்போல் சிவஞானம் வழங்கியருள் தெய்வம்!
வள்ளலெனப் பேருலகில் வழுத்துகின்ற தெய்வம்!
கருணைகொளும் அடியரகம் காட்சிதருந் தெய்வம்!
கண்மணியாஞ் சிவசுப்ர மண்யனெனுந் தெய்வம்!
தெருணிறைந்த உள்ளத்தே திகழுகின்ற தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமதே தெய்வம்! (9)

அன்னையைப்போ லாதரிக்கும் அழகமைந்த தெய்வம்!
அண்டினரைக் காத்தருளும் அருளமைந்த தெய்வம்!
பொன்னுடனே புகழறங்கள் பொருந்தவருட் டெய்வம்!
புகழ்சாமி நாதனெனத் திகழ்ஞான தெய்வம்!
மன்னுசிவ னடியார்கள் மனமுவக்குந் தெய்வம்!
மணிமந்த்ர மாகிபெரு மருந்தாகுந் தெய்வம்!
சின்னையன் சிவபோதன் திருமருகத் தெய்வம்!
செந்தில்நகர் வாழுகின்ற தெய்வமதே தெய்வம்! (10)

---

## வருகைப்பா.

---

வேலா வருக! வினைபழிக்கும் விமலா வருக! விமலைதரும்
பாலா வருக! பரந்தசுடர்ப் பதியே வருக! பரமனெனுஞ்
சீலா வருக! தேவர்சிறை தீர்த்தாய் வருக! சிறந்தவள்ளி
கோலா கலனுந் திருச்செந்தூர் குமரா வருக! வருகவே!

---

சண்முக வடிவே போற்றி! சரவண பவனே போற்றி!
கண்மணி முருகா போற்றி! கதிர்வடி வேலா போற்றி!
விண்ணவர் துரையே போற்றி! விளங்குசெந் தூரா போற்றி!
தண்ணளி சுரக்க வந்த தயாபரா போற்றி! போற்றி!

---

# மயில் பாட்டு.

---

ஆடுமயிலே! நடனம் ஆடுமயிலே!—செந்தில்
ஆறுமுக நாதன்வர ஆடுமயிலே!
அந்தமயிலே! முருகன் சொந்தமயிலே!—பவன்
அனுதினமும் ஏறிவருஞ் சொர்ணமயிலே!
பாடுமடி யார்க்குகந்த பச்சைமயிலே!—எங்கள்
பாவமெலாம் போக்கும்வழிக் கூறுமயிலே!
பக்திபண்ண நல்லவழி காட்டுமயிலே!—எங்கள்
பாலசுப்ர மண்யன்வரப் பண்ணுமயிலே!
கூடுமடி யார்க்கருளைக் கூட்டுமயிலே!—நித்தங்
குதித்துக் குதித்துநீ யாடுமயிலே!
குற்றமற என்றன்வினை போக்குமயிலே!—எங்கள்
குருநாத ரிங்குவரச் செய்யுமயிலே!
தேடுமடி யார்கள்வினை தீர்க்குமயிலே!—தெய்வ
சித்தரடி பணிகின்ற செல்வமயிலே!
சித்தியெலாம் நீயளிப்பாய் சித்ரமயிலே!—யிந்த
சிறுவனுக்கு வாழிபருள் செய்யுமயிலே! (1)

ஆடியென்றும் ஓடிவரும் அந்தமயிலே!—எங்கள்
ஆறுபடை நாதன்வரச் செய்யுமயிலே!
ஆவலெலாம் நீதணிப்பாய் வன்னமயிலே!—சிவ
அன்பர்பணி செய்யும்வழி யாக்குமயிலே!
வாடிநிதம் வருந்துகின்றேன் சொர்ணமயிலே!—நித்தம்
வாடுமடி யேற்கருளச் சொல்லுமயிலே!

வந்துவந் தடிபணிந்தேன் தங்கமயிலே!—எங்கள்
வள்ளல்குமரேசர்வாச செய்யுமயிலே!
கோடிகோடி நமஸ்காரங் கொற்றமயிலே!—என்றன்
குழுவினையைப் போக்கியருள் நீலமயிலே!
குற்றமெலாம் நீபொறுப்பாய் எங்கள்மயிலே!—முழு
கூரவர்பணி செய்யும்வகைச் செப்புமயிலே!
பாடியெங்கும் பாவவருட் கலாபமயிலே!—என்னை
பாவவழி நாடவிடா தாக்குமயிலே!
பாடியுனைப் போற்றுகின்றேன் எங்கள்மயிலே!—நீ
பரிந்தெனக்கு வாழியருள் செய்யுமயிலே! (2)

தங்கமயிலே! பவ பங்கமயிலே!—எங்கள்
சண்முகன் மகிழ்வுறு தாங்கமயிலே!
சந்தமயிலே! குகன் சொந்தமயிலே!—பவன்
சந்ததமு மூர்ந்துவரு விந்தமயிலே!
துங்கமயிலே! அருட் புங்கமயிலே!—பாஞ்
சோதியை நின்மீதுகொணர் ஆதிமயிலே!
தூவிமயிலே! பச்சை நீவிமயிலே!—வேள்
தோன்றவரு ளூன்றிடுவாய் ஆவிமயிலே!
பிங்கமயிலே! வீர சிங்கமயிலே!—சமர்
வீதிதனிற் கொக்கரிக்கும் பீதிமயிலே!
பீலிமயிலே! வன்ன மோலிமயிலே!—சூரர்
பேருரத்தைக் கீருகின்ற மூரிமயிலே!
திங்கள்வதனன் எழில் மங்களகுணன்—றனைச்
சேர்த்திடிலோ கீர்த்தியுண்டு தீர்த்தமயிலே!
சிந்தையில்தயை கொள்வாய் எந்தைதனையே—நான்
சேவித்திட வாழியருள் செய்யுமயிலே! (3)

கத்திகத்தி கூவுகின்ற வெங்கண்மயிலே!—என்னை
காலனிடங் காட்டாதே தஞ்சமயிலே!
காணரிய மெய்ப்பணியில் நின்றமயிலே!—மூல
காரணனை யிங்குவரச் செய்யுமயிலே!
தக்கிம்தத் தத்தோமென் றாடுமயிலே!—எங்கள்
சரவண பவன்வரப் பண்ணுமயிலே!
சத்துசித் தாகுமொரு சண்டைமயிலே!—என்றும்
சாவாத வரந்தந் தாடுமயிலே!
கொத்திகொத்தி நெற்கொரிக்குங் கோலமயிலே!—வனக்
குறமகளின் கொழுநன்வரப் பண்ணுமயிலே!
கொய்புமலர் சாத்திடுவன் வஜ்ரமயிலே!—எங்கள்
குஞ்சரியின் தோழன்வரச் செய்யுமயிலே!
நித்தம்நித்தம் நான் துதிப்பன் நீலமயிலே!—சிவ
நிட்டையெலாங் கூடவருள் ஞானமயிலே!
நேயமயிலே! அன்பர்க் கானமயிலே!—நித்தம்
நேயனுக்கு வாழியருள் செய்யுமயிலே! (4)

அந்தமுள்ள தோகையுட னாடுமயிலே!—எனக்
கருள்வழியைக் காட்டிவைப்பாய் ஆவிமயிலே!
அன்றசுரர் புடைசூழ வந்தமயிலே!—முனம்
அஞ்சிமயி லுருவான வெங்கள் மயிலே!
சந்ததமும் நான் துதிப்பேன் எங்கள்மயிலே!—நித்தம்
சந்தமுற பாடவருள் செய்யுமயிலே!
சண்டைமயிலே! சிகை கொண்டைமயிலே!—பொன்
தண்டைமயிலே! யருட் கொண்டமயிலே!

சிந்தையுட் கவலையறு தெய்வமயிலே!—நித்தம்
சிறுவன்பணி கொள்ளுகின்ற செந்தின்மயிலே!
செங்கண்மயிலே! நல்ல வெங்கண்மயிலே!—எங்கள்
செந்திநகர்ச் செல்வன்வரச் செய்யுமயிலே!
கந்தமயிலே! கருணை வள்ளல்மயிலே!—எங்கள்
கண்டிகதிர் காமன்வரச் செய்யுமயிலே!
கண்களிக்க ஆடுமொரு சித்ரமயிலே!—சித்தங்
கருணையுடன் வாழியருள் செய்யுமயிலே! (5)

ஆருமறி யாமலிங்கே வாருமயிலே!—குறை
ஆவலுடன் கேட்டுவழிப் பண்ணுமயிலே!
ஆறுதிரு முகமிருந்தும் பாரான்மயிலே!—அவன்
ஆறிரு செவியிருந்துங் கேளான்மயிலே!
பாருக்குள் ளவனொரு சித்தன்மயிலே!—எங்கள்
பசுபதி தந்தவொரு மைந்தன்மயிலே!
பட்சமுட னென்னையாளச் சொல்லுமயிலே!—உந்தன்
பகமதைப் பணிகுவே னென்றுமயிலே!
தேறும்வகை யானறியேன் கோலமயிலே!—அந்த
சித்தருட னென்குறையைச் செப்புமயிலே!
சித்தமெலாங் கொள்ளைகொண்டு சென்றான்மயிலே!—அவன்
தேடிவந்த நாளுமொரு மில்லைமயிலே!
போருக் குகந்தவொரு சண்டைமயிலே!—மனம்
போனவழி போகவிடா தாக்குமயிலே!
புந்தியுற வாடுகின்றேன் ஞானமயிலே!—நீ
பொருத்தமுடன் வாழியருள் செய்யுமயிலே! (6)

## வேறு.

மயிலேவடி வயிலேந்திய வானைக் குருபரனை!
வனமாதுறு புனமேகிய மகனை யறுமுகனைச்
சயிலாதிபன் குயின்மாமடி தவழ்மா மழசிவனை!
சதுரானனன் மதமாய்தரு தவனைச் சரபவனைக்
கயலார்விழி மயன்மாதர்கள் கதனை யிளமதனைக்
கருணாலய சரணையெனக் கவலார் பரிபவனை
வெயிலோடிய புயபாநிரு விரகன் றனை யருகே
வினையேன்பெற நினைவாய்நின விரையார்கழல் சரணே. (7)

சிகியேவிட வகிசூடிய சிவனார்க்கருள் பவனைச்
செருகாவிய நிருதேசர்கள் ஜெயனைப் பவபயனை
மகிகாவலர் ககனாதிபர் மதிநாவலர் பகியாய்
வருமூலனை குருவேலனை வரையாடிய துரையை
தகியாவெழு சிகைவானவன் தனைநேர் வினைகெடவே
சணாமருத கிரணாததி ஜலநேர் நிருமலனை
உகியாவிவன் மகிழ்வேயுற வருவாயருள் தருவாய்
மணிசேவடி யணிவேன்முடி மறவேனெம துறவே. (8)

மஞ்ஞாயிளஞ் செஞ்ஞாயிறு வரைமாமுகில் நிரைமேல்
வருமாறுமின் கிரணாநண மணிதோகைத னணியாய்ப்
பஞ்ஞாவுள மெஞ்ஞான்றுமெய்ப் படியும்பழ வடியேன்
பணிவாய்வுறத் தணியாவருள் பருகும்படி தருவாய்
பொய்ஞ்ஞாலமு மஞ்ஞானமும் புரைமாயையுந் திரையாய்ப்
பொன்றும்வகை நன்றென்றிட பொறைவாரியில் நிறைவான்
மெய்ஞ்ஞானமா யெஞ்ஞானமும் மேவித்தருள் ஜோதி
விடசாகர வடவானலன் வினைமோசகன் றனையே. (9)

## வே று.

தருணச் கலாப மயிலே! சமரப்ர தாப மயிலே!
சகுணப்ர தீப மயிலே! சகசித்ர நீப மயிலே!
மரணப் பவத்தை விடவே! மதியிற் சிவத்தை நடவே!
மயலற்ற நித்தை தொடவே! மதுரித்த முக்தி படவே!
அருணப்ர காச வுருவான்! அடியர்க் கிரங்கிவருவான்!
அமரர்க்கு நல்ல திருவான் அசுரர்க் காந்தை தருவான்!
சரணப்ர புத்த வினையே! சரணப்ர சித்த துணையே!
தமமுக்தர் பெற்ற புனையே தருமத்தை யென்முன் னணையே. (10)

---

## த னி.

ஐயனின் சீரெலாம் வாழ்த்தியும் ஏத்தியும்
அன்புறும் பாடல் முற்றும்
செய்யயிவ் வுலகினிற் செப்புமோ ரடியார்கள்
சீரருள் வாய்ந்து மேலும்
வையகம் புகழவே பலவிதச் செல்வமும்
வழங்கிநீ யருளு தற்கு
மெய்யனே காளிநகர் கந்தனே விமலனே
மெய்ப்பதம் பாவி னேனே.

---

## வா ழி.

கந்தவேள் வாழி யெங்கள் காளியம் பதியான் வாழி
சுந்தர வள்ளி வாழி சுடர்தெய்வ யானை வாழி
மந்திர வேலும் வாழி மணிச்சிகை மஞ்ஞை வாழி
சிந்தையில் முருகன் பாதந் துதிப்பவர் வாழி வாழி.

# முருகர் கும்மி.

ஆறுமுக வடி வேலனடி — முருகன்
ஆறிரு கண்க ளுடையாண்டி
பேறுபெறப் பரங் குன்ற — முருகனைப்
பேணிக் கும்மி யடியுங்கடி. (1)

கான மயிலில் வருவாண்டி — முருகன்!
கானக் குறத்திக் கணவனடி
ஆனபுகழ் திருச் செந்தூர் — முருகனை!
அணைந்துக் கும்மி யடியுங்கடி. (2)

மாங்கனி மீதிச்சை வைத்தாண்டி — முருகன்!
மாநிலஞ் சுற்றியே வந்தாண்டி
ஓங்கும் பழநியைச் சேர்ந்தாண்டி — முருகன்!
உயர்வைப் பாடி யடியுங்கடி. (3)

நான்முகனைச் சிறை யிட்டாண்டி — முருகன்!
நாடின பேர்க்கொரு நாதனடி
தேன்பொழி சோலைசு வாமிம — லையனைத்
தேர்ந்துக் கும்மி யடியுங்கடி. (4)

தீங்குசெய் சூரனைக் கொன்றாண்டி — முருகன்!
தீமையி லாத புகழாண்டி
பாங்குபெருந் திருப் போரூர் — முருகனைப்
பணிந்துக் கும்மி யடியுங்கடி. (5)

மாமறை யேத்துஞ் சதுராண்டி — முருகன்!
மாபாவி தன்னை யடையாண்டி
நேமமிகுந் தனி காசல — நாதனை!
நினைந்துக் கும்மி யடியுங்கடி. (6)

அற்புத மான வழகாண்டி — முருகன்!
அன்பர்க் கருள்செயு மண்ணலடி
பொற்புறு மயிலம் மேவு — முருகனைப்
போற்றிக் கும்மி யடியுங்கடி. (7)

ஆனை முகனுக் கிளையாண்டி — முருகன்!
ஆறிரு தோள்க ளுடையாண்டி
தான தவமிகுஞ் செங்கோட் — டையனைத்
தரித்துக் கும்மி யடியுங்கடி. (8)

தந்தைக் குபதேசஞ் செய்தாண்டி — முருகன்!
சரவணப் பொய்கையில் வந்தாண்டி
விந்தைசே ராதி வயலூ — ரையனை
வேண்டிக் கும்மி யடியுங்கடி. (9)

ஆனந்த மான வுருவாண்டி — முருகன்!
ஆன வடியர்க் கமுதனடி
மானமி லங்குவி ராலிம — லையனை
மகிழ்ந்துக் கும்மி யடியுங்கடி. (10)

தேவர் சிறைகளை மீட்டாண்டி — முருகன்
தெய்வானைக் கேற்ற மணாளனடி
பாவமி லாப்புகழ் வேளூர் — முருகனைப்
பாடிக் கும்மி யடியுங்கடி. (11)

வேங்கை மரமாகி நின்றாண்டி — முருகன்
வேடர் குலத்தினிற் சேர்ந்தாண்டி
தேங்குபுகழ் சிக்கல் வாழ் — முருகனைத்
தெளிந்துக் கும்மி யடியுங்கடி. (12)

செங்கதிர் வேலை யுடையாண்டி — முருகன்
சீர்திகழ் தோகை மயிலாண்டி
மங்களஞ் சேரெண்கண் வாழு — முருகனை
வணங்கிக் கும்மி யடியுங்கடி. (13)

பாவலர் நாவுக் கரசனடி — முருகன்
பார்புக ழெட்டிக் குடியாண்டி
நாவலர் போற்றுங் குமரனடி — முருகன்
நலத்தைப் பாடி யடியுங்கடி. (14)

நாத முடிவி லிருப்பாண்டி — முருகன்
நான்மறைக் கெல்லாந் தலைவனடி
போதப் பழமுதிர் சோலை — முருகனைப்
புகழ்ந்துக் கும்மி யடியுங்கடி. (15)

நாளும் விடாமலே பாடிடுங் — கோவிந்த
ராஜற் கருள்செயும் நாதனடி
ஆளுடை யண்ணல் சிராமலை — மேவிய
அழகனைப் பாடி யடியுங்கடி. (16)

கும்மியடிப் பெண்கள் கும்மியடி — முருகன்
கோரும் வரங்களைத் தந்தருள்வான்
நம்மை யாளுஞ் சண்முக — நாதனை
நாடிக் கும்மி யடியுங்கடி. (17)

---

170670

# திருப்புகழ்.

---

தான தனதன தான தனதன தான தனதன — தனதான

வேலை யுலகினி லாரு முயிரிடை மேல தெனுமொரு—நாணுகி
மோக மிகுதிரை தாவி படரிட மீள வகையினை—யறியாமல்
சால வினைகொடு மாதர் மயலிடை சார பிணிகளு—மிகவாக
தாப மதிலுறு பாவி களினிடை தாவு மனதினை—தளராமல்
நாலு மறைகளு மோது முனதிரு நாத வடியிணை—நலமாக
ஞால மதிலுனை தேடு மடியரை நாடு நலனுற—அருள்வாயே
மாலை யெழுமதி போல ஒளிமிகு மாது குறமகள்—மணவாளா
வாடு மடியனை நீடு புவியினில் வாழ வருள்புரி—குருநாதா.

---

## அறுசீர் விருத்தம்

---

கலியினிற் கந்த வேளே காணுமெய்த் தெய்வ மாகப்
யொலிவுறல் அறிந்து மேலோர் போற்றின ராத லாலே
நலிவுசெய் நோய்கள் நீங்க நானுமென் நெஞ்சி லெண்ணி
மலிமணத் தமிழான் மாலை சூட்டினன் வடிவே லர்க்கே!

---

## வெண்பா.

---

அப்பா!யென் னுருயிரே! அன்ப ரகக்குகையிற்
றப்பாது வீற்றிருக்குஞ் சண்முகனே!—எப்போதும்
மங்காத செல்வ மருவிவர நல்லருளை
யிங்கா தரித்தடிபேற் கே.

---

## கொச்சகக் கலிப்பா.

---

காலனையன் றுதைத்தபெருங் கண்ணுதலார் தருஞ்செல்வன்
கோலமுறும் எங்கடவுள் குலவுதிரு மயிலானைப்
பாலர்முதற் பெரியோர்கள் பரிவுடனே பணிசெய்தால்
சாலநமக் கருள்புரிவன் சாமிகுரு நாதனம்மா.

---

# விற்பனை நூல்கள்.

| | ரூ. அ பை |
|---|---|
| * சிவசண்முகக்கடவுள் பதிகமஞ்சரி | 0—8—0 |
| கந்தசுவாமிக்கடவுள் பதிகக்கோவை | 0—4—0 |
| குமரகிரிவாசர் பதிகம் | 0—1—0 |
| தண்டபாணிக்கடவுள் பதிகம் | 0—1—0 |

* அச்சிலிருக்கிறது.

---

விலாசம்,
T. R. கோவிந்தராஜ முதலியார்,
கெ.-56 பிள்ளையார்கோவில் சந்து,
மேட்டுத்தெருவு, சேலம்.